Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி
தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 167 | உள்ளூர் - 16.06.2026 | செவ்வாய் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 167 | வெளியூர் - 17.06.2026 | புதன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

உங்கள் பணிகள் ஏன் தாமதமாகின்றன? வாஸ்து சாஸ்திரம்!

AIIMS-ல் புதிய 2668 காலிப்பணியிடங்கள்!

33 சர்வதேச விருதுகளை பெற்று மோடி சாதனை!

டெலிகிராம் செயலியை பயன்படுத்த தடை!

## 33 சர்வதேச விருதுகளைப் பெற்று பிரதமர் மோடி சாதனை!



சென்னை, ஜூன். 16–

இதுவரை 33 சர்வதேச நாடுகளின் உயரிய விருதுகளைப் பெற்று பிரதமர் மோடி சாதனை படைத்துள்ளார். அதன் விபரம் பின்வருமாறு:

**விருதுகளின் பட்டியல் (ஆண்டு வாரியாக):**

**ஆண்டு (2026)**

* (ஜூன் 15)– 'தி ஆர்டர் ஆப் தி ஒயிட் டபுள் கிராஸ்'– ஸ்லோவாக்கியா
* ராயல் ஆர்டர் ஆப் தி போலார் ஸ்டார் கமாண்டர் கிராண்ட் கிராஸ்– ஸ்வீடன்
* ஸ்பீக்கர் ஆப் தி நீசெட் மெடல்– இஸ்ரேல்
* கிராண்ட் கிராஸ் ஆப் தி ராயல் நார்வேஜியன் ஆர்டர் ஆப் மெரிட் –நார்வே

**ஆண்டு (2025)**

* ஆர்டர் ஆப் ஓமன்– ஓமன்
* கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோப்பியா – எத்தியோப்பியா
* தி ஆர்டர் ஆப் தி மோஸ்ட் ஏசியன்ட் வெல்விட்சியா மிராபிலிஸ்– நமீபியா
* கிராண்ட் காலர் ஆப் தி நேஷனல் ஆர்டர் ஆப் தி சதர்ன் கிராஸ்– பிரேசில்
* தி ஆர்டர் ஆப் தி ரிபப்ளிக் ஆப்– டிரினிடாட் & டொபாகோ
* தி ஆபிஸர் ஆப் தி ஆர்டர் ஆப் தி ஸ்டார் ஆப் கானா– கானா
* சைப்ரஸின் 'கிராண்ட் கிராஸ் ஆப் தி ஆர்டர் ஆப் மகாரியோஸ் III மித்ர விபூஷண விருது – இலங்கை
* கிராண்ட் கமாண்டர் ஆப் தி ஆர்டர் ஆப் தி ஸ்டார் அண்ட் கீ ஆப் தி இந்தியன் ஓஷன் – மொரிஷியஸ்

**ஆண்டு– 2024**

* ஹானரரி ஆர்டர் ஆப் ப்ரீடம் ஆப் பார்படாஸ் விருது– பார்படாஸ்
* தி ஆர்டர் ஆப் முபாரக் அல் கபீர் – குவைத்
* தி ஆர்டர் ஆப் எக்ஸலன்ஸ் – கயானா
* தி டொமினிகா அவார்ட் ஆப் ஹானர் – டொமினிகா
* தி கிராண்ட் கமாண்டர் ஆப் தி ஆர்டர் ஆப் தி நைஜர்– நைஜீரியா
* ஆர்டர் ஆப் செயின்ட் ஆண்ட்ரூ தி அப்போஸ்தல் – ரஷ்யா
* ஆர்டர் ஆப் தி ட்ருக் கியால்போ– பூடான்

**(ஆண்டு –2023)**

* கிராண்ட் கிராஸ் ஆப் தி ஆர்டர் ஆப் ஹானர் – கிரீஸ்
* கிராண்ட் கிராஸ் ஆப் தி லீஜியன் ஆப் ஹானர்– பிரான்ஸ்
* ஆர்டர் ஆப் தி நைல் – எகிப்து
* கிராண்ட் கம்பேனியன் ஆப் தி ஆர்டர் ஆப் லோகோஹூ கம்பேனியன் ஆப் தி ஆர்டர் ஆப் பிஜி – பிஜி
* எபாக்ல் விருது – பலாவு

**(ஆண்டு– 2020)**

* அமெரிக்க அரசாங்கத்தின் லீஜியன் ஆப் மெரிட் – அமெரிக்கா

**(ஆண்டு– 2019)**

* கிங் ஹமத் ஆர்டர் ஆப் தி ரெனைசான்ஸ்– பஹ்ரைன்
* ஆர்டர் ஆப் சையத் விருது – ஐக்கிய அரபு அமீரகம்
* ஆர்டர் ஆப் தி டிஸ்டிங்குவிஷ்டு ரூல் ஆப் நிஷான் இசுதீன் – மாலத்தீவு

**(ஆண்டு– 2018)**

* கிராண்ட் காலர் ஆப் தி ஸ்டேட் ஆப் பாலஸ்தீன் விருது – பாலஸ்தீனம்

**(ஆண்டு– 2016)**

* ஸ்டேட் ஆர்டர் ஆப் காஸி அமீர் அமானுல்லா கான் – ஆப்கானிஸ்தான்
* தி கிங் அப்துல் அஸீஸ் சாஷ் – சவுதி அரேபியா

# பைனான்ஸ் வங்கிகளின் 'டார்க் பேட்டர்ன்' மோசடி ஆர்பிஐ அதிரடி தடை!

## வாடிக்கையாளர்கள் நிம்மதி!!

புதுடெல்லி, ஜூன். 16–

வாடிக்கையாளர்களை ஏமாற்றி, அவர்களுக்குத் தேவையில்லாத இன்சூரன்ஸ் அல்லது நிதித் தயாரிப்புகளைத் திணிக்கும் 'டார்க் பேட்டர்ன்' (Dark Patterns) முறைகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அதிரடியாகத் தடை விதித்துள்ளது.

இனி வங்கிகளும், வங்கி சாரா நிதி நிறுவனங்களும் (NBFC) தங்களது சேவைகளில் முழுமையான வெளிப்படைத்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் போது வாடிக்கையாளர்கள் மறைமுகக் கட்டணங்களால் பாதிக்கப்படுவதைத் தடுக்கவே இந்த முக்கிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்பே டிக் செய்யப்பட்ட பாக்ஸ்கள் (Pre–ticked boxes), வாடிக்கையாளரின் தெளிவான விருப்பம் இல்லாமல் மற்ற சேவைகளைத் திணிப்பது போன்றவை இந்த 'டார்க் பேட்டர்ன்' பட்டியலில் வரும். உதாரணமாக, சில செயலிகள் தனிநபர் கடன் வழங்க வேண்டும் என்றால், கட்டாயம் ஆயுள் காப்பீடு எடுக்க வேண்டும் எனப் பயனர்களை வற்புறுத்துகின்றன. புதிய விதிகளின்படி, இனி இது போன்ற செயல்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நிதிச் சேவைக்கும் வாடிக்கையாளரிடம் இருந்து தனித்தனியாகவும், தெளிவான முறையிலும் அனுமதி பெறுவது இனி கட்டாயம். கடன் மற்றும் கிரெடிட் கார்டு சேவைகளில் கூடுதல் பாதுகாப்பு கிரெடிட் கார்டுகள் மற்றும் 'பை நவ் பே லேட்டர்' (BNPL) சேவைகளில் இந்த விதிகள் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும்.

அதிக வட்டி அல்லது மறைமுகக் கட்டணங்களை மறைக்க இனி நிதி நிறுவனங்கள் குழப்பமான வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது. ஒருவேளை வாடிக்கையாளருக்குத் தவறான ஒரு தயாரிப்பு விற்கப்பட்டால், அதற்கான பணத்தைத் திரும்பப் பெற (Refund) வங்கிகள் வழிவகை செய்ய வேண்டும். அவசரமாகக் கடன் தேவைப்படுபவர்களின் நிலையைப் பயன்படுத்தி டிஜிட்டல் தளங்கள் அவர்களைச் சுரண்டுவதை இது தடுக்கும். சேவை பிரிவு புதிய RBI விதிமுறை கடன் குறுக்கு விற்பனை (Loan Cross–sell) முன்பே டிக் செய்யப்பட்ட பாக்ஸ்கள் இருக்கக்கூடாது ஆப் பட்டன்கள் (App Buttons) வெளியேறத் தெளிவான வழி இருக்க வேண்டும் இனி கடன் விண்ணப்பங்களை நிரப்பும்போது, மறைமுகமாக ஏதேனும் செக்–பாக்ஸ்கள் டிக் செய்யப்பட்டுள்ளதா என்பதை வாடிக்கையாளர்கள் கவனமாகச் சரிபார்க்க வேண்டும்.

தேவையில்லாத இன்சூரன்ஸ் திட்டங்களைத் தவிர்க்க 'ஆப்ட்–அவுட்' (Opt–out) பட்டன் இருக்கிறதா என்று பாருங்கள். ஏதேனும் மோசடி முறைகளைக் கவனித்தால், உடனடியாக வங்கிக்குப் புகார் அளியுங்கள். இந்த எளிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், லோன் ஆப்–களால் ஏற்படும் ஆபத்தான கடன் வலையில் நீங்கள் சிக்காமல் இருக்க உதவும். இந்தியக் குடிமக்களுக்கு நேர்மையான டிஜிட்டல் வங்கிச் சேவையை உறுதி செய்ய ரிசர்வ் வங்கி எடுத்துள்ள இந்த நடவடிக்கை ஒரு முக்கிய மைல்கல். குழப்பமான அறிவிப்புகளை நீக்குவதன் மூலம், நாட்டின் ஃபின்டெக் (Fintech) கட்டமைப்பின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த ரிசர்வ் வங்கி முயல்கிறது. விதிகளை மீறும் பெரிய நிறுவனங்களுக்கு எதிர்காலத்தில் கடுமையான அபராதங்களும் விதிக்கப்படலாம். உங்கள் உரிமைகளைத் தெரிந்து கொள்வது, உங்கள் நிதி நிலையைச் சரியாக நிர்வகிக்க உங்களுக்கு உதவும்.







## டெலிகிராம் செயலியை பயன்படுத்த தடை!




டெல்லி. ஜூன். 16–

நாடு முழுவதும் டெலிகிராம் செயலியை பயன்படுத்த தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வு நடைபெறும் வரும் 22–ஆம் தேதி வரை டெலகிராம் பயன்படுத்த மத்திய அரசு தடை விதித்துள்ளது. நீட் தேர்வு வினாத்தாள் கசிவதை தடுக்க நாடு முழுவதும் டெலிகிராம் செயலியை பயன்பாடுத்த தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவு வங்கி: விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி!

சென்னை, ஜூன். 16–

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்களால் 25.05.2026 தேதியில் ரூ.50,000/– வரை பயிர்கடன் பெற்ற குறு, சிறு




விவசாயிகளுக்கு முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்து பயிர் கடன் தள்ளுபடித் திட்டம் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாநிலம் முழுவதிலுமிருந்து இவ்விவசாய கடன் தள்ளுபடி குறித்து மறுபரிசீலனை செய்ய பல்வேறு தரப்புகளிலிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மேற்கண்ட கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலனை செய்ய உத்திரவிட்டதற்கிணங்க மேற்கண்ட பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தினை மறு ஆய்வு செய்திட 15.06.2026 அன்று தலைமைச் செயலகத்தில் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இம்மறு ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள் தலைமையில் விவசாயி களுக்கான பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக, வேளா ண்மை உழவர் நலத்துறை, கூட்டுறவுத் துறை, நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களுடன் மறு பரிசீலனை செய்யப்பட்டது.

இந்திய ரிசர்வ் வங்கியின் 28.11.2025 ஆம் தேதியிட்ட அரசு கடன் தள்ளுபடி திட்டங்களுக்கான மாதிரி செயல்பாட்டு நடைமுறைகளின்படி, பயிர்க்கடன் தள்ளுபடிக்கான முழுத்தொகையையும் அரசானது 45 முதல் 60 நாட்களுக்குள் முழுமையாக செலுத்தவேண்டும் என்ற வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு அரசின் இன்றைய நிதிநிலை மற்றும் நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், கூட்டுறவு வங்கிகளில்

01.05.2025 முதல் 28.02.2026 வரை பயிர் கடன் பெற்ற 14.43 இலட்சம் விவசாயிகளுக்கு சுமார் ரூ.6,000 கோடி வரை கீழ்க்கண்டவாறு தள்ளுபடி செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடன் தொகை ரூபாயில் குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயிக்கான தள்ளுபடி (ரூபாயில்)

75,000 வரை கடன் தொகை முழுவதும் (100%)

75,000 க்கு மேல் 35,000

இதன்மூலம் கடந்த நிதியாண்டில் பயிர்க்கடன் பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் அதிகபட்சமாக ரூ.75,000/–மும் குறைந்தபட்சமாக ரூ.35,000/–மும் பணப்பயன் கிடைக்கும்.

இந்தப் பயிர்க்கடன் தள்ளுபடி, எதிர்வரும் சாகுபடி பருவத்திற்கு கடன்பெறவிரும்பும்விவசாயிகளுக்கு பெருமளவில் பயன்தரும்.

(தொகை ரூபாய் கோடியில்)

75,000 வரை 75,000 க்கு மேல் மொத்தம்
நபர் தொகை நபர் தொகை நபர் தொகை

குறு விவசாயி 5,22,831 2,511.37 3,10,942 1,088.30 8,33,773 3,599.67

சிறு விவசாயி 94,729 520.33 4,21,454 1,475.09 5,16,183 1,995.42

இதர பெரு விவசாயி 4,753 26.36 88,795 310.78 93,548 337.15

மொத்தம் 6,22,313 3,058.06 8,21,191 2,874.17 14,43,504 5,932.23

8,33,773 குறு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.3,599.67 கோடி

5,16,183 சிறு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.1,995.42 கோடி

93,548 இதர பெரு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.337.15 கோடி

ஆக கூடுதல் 14,43,504 விவசாயிகளுக்கு உத்தேச பயிர் கடன் தள்ளுபடித் தொகை ரூ.5,932.23 கோடி ஆகும்.

இந்தப் பயிர்க்கடன் தள்ளுபடித் திட்டத்தின் கீழ் 01.05.2025 முதல் 28.02.2026 வரை கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்றுள்ள 14,43,504 விவசாயிகள் பயனடைவார்கள்.

இதனால் அரசுக்கு ரூ.5,932.23 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.



தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 16.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 02-ம் தேதி

# கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைத் தடுத்து அழிக்கும்சோதனை வெற்றி!




இந்த வார தொடக்கத்தில் நிகழ்ந்த ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாக, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டி.ஆர்.டி.ஓ), பல அடுக்கு பாலிஸ்டிக் ஏவுகணை பாதுகாப்பு (பி.எம்.டி) திறனை வெற்றிகரமாகச் சோதித்துள்ளது.

இந்த அமைப்பால் கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணைகள் (ஐ.சி.பி.எம்) உள்ளிட்ட இலக்குகளைத் தாக்க முடியும். இந்த முன்னேற்றத்தின் மூலம், கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணைகளுக்கு (ஐ.சி.பி.எம்) எதிராகப் பாதுகாக்கும் திறன் கொண்ட நாடுகளின் உயரடுக்கு குழுவில் இந்தியா இணைகிறது.

நீண்ட தூர பாலிஸ்டிக் ஏவுகணைகளுக்கு எதிரான பல அடுக்கு பாதுகாப்பு மற்றும் நடுத்தர தூரத்திலான கப்பல் எதிர்ப்புத் திறனை நிரூபிப்பதற்காக, டி.ஆர்.டி.ஓ ஜூன் 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் அடுத்தடுத்து மூன்று வான்வழிச் சோதனைகளை நடத்தியதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜூன் 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட சோதனைகளின் போது, பல அடுக்கு பாலிஸ்டிக் ஏவுகணை பாதுகாப்பு (BMD) திறன் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டது. "இடைமறிக்கும் ஏவுகணைகள் அவற்றிற்குரிய இலக்குகளை வெற்றிகரமாகத் தாக்கின. வளர்ந்து வரும் ஏவுகணை அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில், இந்த அமைப்புகள் அதிநவீன தொழில்நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன" என்று அந்த அறிக்கை கூறுகிறது.

கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக்ஏவுகணைகள் வரையிலான இலக்குகளைத் தாக்கும் பி.எம்.டி பாதுகாப்புத் திறன் கொண்ட நாடுகளின் உயரடுக்கு குழுவில் இந்தச் சோதனைகள் நாட்டை இணைத்துள்ளன என்பதை அந்த அறிக்கை அடிக்கோடிட்டுக் காட்டியது.

கடற்படையின் நடுத்தர தூர கப்பல் எதிர்ப்பு ஏவுகணையின் (NASM–MR) முதல் வான்வழிச் சோதனையும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்ட அந்த அறிக்கை, இந்த வான்வழிச் சோதனைகளை டிஆர்டிஓ மற்றும் பாதுகாப்புப் படையின் மூத்த அதிகாரிகள் நேரில் பார்வையிட்டதாக மேலும் தெரிவித்தது.

இந்த முக்கியமான தொழில்நுட்பங்களை வெற்றிகரமாக நிரூபித்ததற்காக டிஆர்டிஓ அமைப்பிற்குப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். டிஆர்டிஓ தலைவர் ராஜேஷ் குமார் சிங் இந்தச் சோதனைகளைக் கண்காணித்து, டிஆர்டிஓ மற்றும் பாதுகாப்புத் தளவாடத் தொழிற்துறையின் கூட்டு முயற்சிகளைப் பாராட்டினார்.

இந்த சோதனைகள் இந்தியாவின் வான் மற்றும் கடற்படை பாதுகாப்பு திறன்களை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. ஏவுகணைகளை துல்லியமாகக் கண்டறிந்து இடைமறிக்கும் திறன் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டதாகவும், நாட்டின் பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் இது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக கருதப்படுவதாகவும்,இந்த வெற்றி, உள்நாட்டு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் இந்தியாவின் தன்னிறைவு முயற்சிக்கு மேலும் வலுசேர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்திய ராணுவ லடாக் கர்னலாக வத்திராயிருப்பு விஜயகுமார் தேர்வு!



வத்திராயிருப்பு, ஜூன். 16–

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பை சேர்ந்த விஜயகுமார், 40, கடந்த 2008ல் யு.பி.எஸ்.சி.,யுடன், இந்திய ராணுவம் இணைந்து நடத்திய டிபன்ஸ் தேர்வில் வெற்றி பெற்று, பணியில் சேர்ந்தார். லடாக் யூனியன் பிரதேச பொறுப்பு அதிகாரியாக பதவியேற்றார்.

காலாட்படை மேஜராக பதவி உயர்வு பெற்று, ஹைதராபாத், ராஜஸ்தான், வெலிங்டன், மேற்கு பிராந்தியம் உட்பட பல்வேறு பிரிவுகளில் பணிபுரிந்தார். 2016ல், கல்வான் பள்ளத்தாக்கில் சீனாவுடன் ஏற்பட்ட மோதலின்போது முக்கிய பங்காற்றினார்.

கடந்த 2018ல் ஐக்கிய நாடுகளுக் கான அமைதிப்படையில் தேர்வாகி, லெப்டினன்ட் கர்னலாக சூடான் நாட்டில் பணிபுரிந்தார் தற்போது, பதவி உயர்வு பெற்று, லடாக் ஸ்கவுட் பிரிவு கர்னலாக பொறுப்பேற்றார்.

ஜெய்ப்பூரில் நடந்த விழாவில், முந்தைய கர்னல் ரஞ்சன் குமார், தன் பொறுப்புகளை விஜயகுமாரிடம் ஒப்படைத்து, பதவி பிரமாணம் செய்து வைத்தார்.



திண்டுக்கல் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக எம்.ராஜசெல்வன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# கர்நாடகாவில் 7 எம்.எல்.சி., பதவிக்கு 18-ல் தேர்தல்: சொகுசு விடுதியில் காங்., - எம்.எல்.ஏ.,க்கள்!

பெங்களூரு, ஜூன். 16–

கர்நாடகாவில், ஏழு எம்.எல்.சி., பதவிகளுக்கு தேர்தல் நடக்கவுள்ளது. தன் எம்.எல்.ஏ.,க்களை எதிர்க்கட்சிகள் இழுத்துவிடக் கூடாது என்பதற்காக, அவர்களை தங்க வைக்க சொகுசு விடுதியில், 150 அறைகளை காங்., முன்பதிவு செய்துள்ளது.

கர்நாடகாவில் மு தல்வர் சிவகுமார் தலைமையில் காங்., ஆட்சி நடக்கிறது. இங்கு காலியாக உள்ள, ஏழு எம்.எல்.சி., எனப்படும் மேல்சபை உறுப்பினர் இடங்களுக்கு 18ல் தேர்தல் நடக்கிறது.

மேல்சபை தேர்தலில் ஒரு வேட்பாளரின் வெற்றிக்கு, 28 எம்.எல்.ஏ.,க்கள் ஓட்டுகள் வேண்டும். அதன்படி, ஆளுங்கட்சியான காங்கிரஸ், நான்கு இடங்கள், பா.ஜ., இரண்டு இடங்களை எளிதாக கைப்பற்றலாம்.

எனினும், எதிர்க்கட்சிகளின் அதிருப்தி எம்.எல்.ஏ.,க்கள், சில சுயேச்சை எம்.எல்.ஏ.,க்களின் ஓட்டுகளை நம்பி, காங்., ஐந்தாவது வேட்பாளரையும், 19 எம்.எல்.ஏ.,க்களை மட்டும் வைத்துள்ள ம.ஜ.த., எனப்படும் மதச்சார்பற்ற ஜனதா தளம் ஒரு வேட்பாளரையும் களமிறக்கி




யுள்ளது. கூட்டணி கட்சியான பா.ஜ.,வின் கூடுதல் ஓட்டுகள் தனக்கு கிடைக்கும் என, ம.ஜ.த., நம்புகிறது.

மேல்சபை தேர்தலில் ரகசிய ஓட்டெடுப்பு நடக்கும் என்பதால், தங்கள் எம்.எல்.ஏ.,க்கள் கட்சி மாறி ஓட்டு போடுவரோ என்ற பயத்தில் மூன்று கட்சிகளும் உள்ளன.

காங்கிரசின் 14 எம்.எல்.ஏ.,க்களை, ம.ஜ.த., தலைவர்கள் தொடர்பு கொண்டதாக, காங்., மேலிடத்துக்கு தகவல் கிடைத்து, மாநில தலைமையை எச்சரித்துள்ளது.

இதனால், எம்.எல்.ஏ.,க்களை சொகுசு விடுதியில் தங்க வைக்க காங்., திட்டமிட்டுள்ளது. பிடதியின், 'ஒண்டர்லா' சொகுசு விடுதியில் எம்.எல்.ஏ.,க்களுக்காக, 150 அறைகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. காங்., – எம்.எல்.ஏ.,க்கள் கூட்டம், இதே விடுதியில் நடக்கவுள்ளது.

# ஒட்டன்சத்திரம் நகர பகுதியில் வீணாகும் காவிரி கூட்டு குடிநீர்!




ஒட்டன்சத்திரம், ஜூன். 16–

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒட்டன்சத்திரம் நகராட்சியில் காவிரி கூட்டு குடிநீர் வீணாகி சாக்கடையில் செல்கிறது

ஒட்டன்சத்திரம் 18–வது வார்டில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டி கடந்த சில மாதங்களில் திறப்பு விழா காணப்பட்டது.இந்த தண்ணீர் தொட்டிக்கு காவிரி கூட்டு குடிநீர் செல்லும் பைப்புகளில் குடிநீர் வீணாகி செல்கிறது.காலை மாலை என இரு நேரங்களிலும் சாக்கடை வழியாக குடிநீர் வெளியேறி கொண்டு இருக்கிறது. இதை பொதுமக்கள் நகராட்சி நிர்வாகத்திடம் பலமுறை கூறியும் அவர்கள் இதை கண்டு கொள்ளவில்லை என கூறப்படுகிறது. இதில் சம்பந்தப்பட்ட நகராட்சி நிர்வாகம் குடிநீர் வீணாகுவதை உடனடியாக சரி செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் குடிநீர் வீணாகுவதை தடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆதார் அலுவலகத்தில் இருக்கை இல்லாமல் தரையில் அமரும் அவல நிலை!



திருப்பத்தூர், ஜூன்.16–

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆதார்காரடு திருத்தம் செய்ய வந்த பொதுமக்கள், தினமும் 100 க்கு மேற்பட்ட பொதுமக்கள், மாணவர்கள், வந்து செல்லுவது வழக்கம், ஆனால் பலமுறை இதற்க்கு முன்பு இருந்த ஆட்சியரிடம், பொதுமக்கள் கேட்டபோதும், எந்த நடவடிக்கை எடுக்கவில்லை, புதியதாக மாவட்ட ஆட்சியர் இதற்க்கு தீர்வு காண வேண்டும். இருக்கைகள் இல்லாமல் தரையில் அமரும் அவலம்நிலை, தரையில் அமர முடியாமல் நின்று அவதிப்பட்டு கொண்டிருந்தத மாற்றுத்திறனாளி சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# கள உதவியாளராக மாற்றக்கோரி கேங்மேன் பணியாளர்கள் போராட்டம்!

சென்னை, ஜூன். 16–

மின் வாரியத்தில் உள்ள, 'கேங்மேன்' பணியாளர்களை, கள உதவியாளராக மாற்றக்கோரி, சென்னை அண்ணா சாலை மின்வாரிய தலைமை அலுவலகம் அருகே நேற்று, காத்திருப்பு போராட்டம் நடந்தது. இதுகுறித்து, கேங்மேன் பணியாளர் சங்க தலைவர் தமிழரசு, பொதுச்செயலர் ஸ்ரீராமன் கூறியதாவது:

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக கேங்மேன் பணியாளர்களாக, 9,613 பேர் உள்ளனர். அதிக காலியிடங்கள் இருப்பதால், 2021ல் பணியில் சேர்ந்த நாள் முதல், தங்களது பணிகள் மட்டுமின்றி, கள உதவியாளர்கள், கம்பியாளர் பணிகளையும், கேங்மேன்கள் செய்து வருகின்றனர்.



கள உதவியாளர்களுக்கான பணிகளும், கேங்மேன் பணியாளர்கள் செய்து வரும் பணிகளும் ஒரே மாதிரியாக உள்ளன. கள உதவியாளராக பணிபுரிபவருக்கு பதவி உயர்வு உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன.

கேங் மேன் பணியாளர்களை கள உதவியாளராக அறிவிக்க கோரி, தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறோம். தற்போது, கள உதவியாளர் பணியிடங்களுக்கு வெளியில் இருந்து நேரடி நியமனம் செய்யப்பட இருப்பதாக தகவல் வருகின்றன. எனவே, அனைத்து கேங்மேன் பணியாளர்களையும், ஒரே கட்டமாக கள உதவியாளராக மாற்றி, தேவைக்கு ஏற்ப நேரடி நியமனங்களை மேற்கொள்ள வேண்டும். அந்த பணியிடங்களுக்கான நேரடி நியமனம், கேங்மேன் பணியாளர்களின் முன்னுரிமையை பாதிக்காத வகையில் இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# புதுச்சேரி அமைச்சரவை விரிவாக்கம்!

புதுச்சேரி, ஜூன். 16–

புதுச்சேரியில் ரங்கசாமி தலைமையிலான அமைச்சரவை ஜூன். 17–ல் விரிவாக்கம் செய்யப்படுகிறது. அமைச்சரவை விரிவாக்கம் நடந்த பிறகு புதுச்சேரி சட்டமன்றம் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# எஸ்.எஸ்.எல்.சி. துணைத்தேர்வு: தேர்வர்கள் விண்ணப்பிக்க கடைசி நாள்!



சென்னை, ஜூன். 16–

எஸ்.எஸ்.எல்.சி. துணைத்தேர்வு அடுத்த மாதம் (ஜூலை) நடைபெற உள்ளது. இத்தேர்வுக்கு மாணவர்கள், தனித்தேர்வர்கள் இணையதளத்தில் விண்ணப்பிக்கவும். இதில் விண்ணப்பிக்க தவறியவர்களுக்கு காலஅவகாசமும் வழங்கப்பட்டது. தற்போது மீண்டும் நீட்டிக்கப்பட்டு சிறப்பு தட்கல் முறையில் மாவட்ட அரசு தேர்வுகள் உதவி இயக்குனர் அலுவலகங்கள் வாயிலாக இணையதளம் மூலம் விண்ணப்பிக்க ஜூன் 16 கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் படித்து தோல்வியடைந்தவர்கள், வருகைபுரியாதவர்கள், தனித்தேர்வர்கள் அந்தந்த மாவட்ட அரசுத்தேர்வுகள் உதவி இயக்குனர் அலுவலகத்தில் உரிய ஆவணங்களுடன் நேரில் சென்று தேர்வு கட்டணத்துடன் கூடுதலாக ரூ.500 சிறப்பு கட்டணமாக செலுத்தி ஆன்லைனில் தட்கல் முறையில் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களை விண்ணப்பதாரர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம்.

அறிவியல் பாட செய்முறை பயிற்சி வகுப்பிற்கு சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலகங்களில் விண்ணப்பித்திட மீண்டும் இன்று ஒரு நாள் மட்டும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. மேற்கண்ட தகவல் அரசு தேர்வுகள் இயக்கம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியா புதிய சாதனை!



டெல்லி, ஜூன். 16–

கடந்த மே மாதத்தில் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு பொருட்கள் ஏற்றுமதியில் புதிய சாதனை படைத்துள்ளது. கடந்த மே மாதம் 45.2 பில்லியன் டாலர் மதிப்பிலான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டு 38.3 பில்லியன் டாலர் மதிப்பிலான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

# சற்றே குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஜூன். 16–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.80 குறைந்து ரூ.1,12,480–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து ரூ.14,060–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போல வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.275–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# சண்முகத்தை சமரசம் செய்ய முயற்சி!



சென்னை, ஜூன். 16–

சண்முகத்தை சமரசம் செய்யும் முயற்சியாக, முன்னாள் அமைச்சர் உதயகுமார் வாயிலாக அறிக்கை வெளியிட செய்துள்ளார் பழனிசாமி.

அதன்படி உதயகுமார் வெளியிட்ட அறிக்கை: கட்சிக்குள் விவாதிக்க வேண்டிய விஷயங்களை பொதுவெளியில் விவாதிப்பது, ஆரோக்கியமான அரசியலாக அமையாது. திட்டமிட்டு அ.தி.மு.க.,வை சிதைக்க நினைக்கும் முதல்வர் விஜயின் அரசியல் அநாகரிகத்தை தடுக்க வேண்டும்.

இந்த நேரத்தில், மூத்த தலைவரான தாங்களே கண்ணியமின்றி பொதுவெளியில் விவாதிக்கலாமா? இது குற்றச்சாட்டு அல்ல; தொண்டனின் மனக்குமுறல். விஜய் ஆட்சி குறித்து, மக்களுக்கு நிழல் எது, நிஜம் எது என்று தெரிய வருகிறது. பழனிசாமி தலைமையில் புதிய சரித்திரம் படைப்போம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# உங்கள் பணிகள் ஏன் \தாமதமாகின்றன? வாஸ்து சாஸ்திரத்தின்படி உண்மையான காரணம்!




வாழ்க்கையின் ஏதோ ஒரு கட்டத்தில், மிகுந்த உற்சாகத்துடன் தொடங்கிய ஒரு பணி, கடைசி நேரத் தாமதங்கள் அல்லது எதிர்பாராத தடைகள் காரணமாக முழுமையடையாமல் நின்றுபோகும் சூழலை பலர் எதிர்கொள்கிறார்கள். பணி முடிவடையும் என்று நினைத்த தருணத்தில் சிக்கல்களைச் சந்திப்பது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கலாம்.

வாஸ்து சாஸ்திரத்தின்படி, வீட்டில் உள்ள எதிர்மறை ஆற்றல்கள் மற்றும் வாஸ்து தோஷங்கள் இத்தகைய சூழல்களுக்குக் காரணமாக அமைகின்றன. வீட்டில் எதிர்மறை ஆற்றல் அதிகரிக்கும் போது, குடும்ப உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள், நிதி நெருக்கடிகள், மன அழுத்தம் மற்றும் முக்கியமான பணிகளில் தடைகள் போன்றவை ஏற்பட வாய்ப்புள்ளதாக வாஸ்து நிபுணர்கள் கூறுகின்றனர். இருப்பினும், இந்தத் தோஷங்களைக் குறைத்து நேர்மறை ஆற்றலை அதிகரிக்க வாஸ்து சாஸ்திரம் சில எளிய பரிகாரங்களை முன்மொழிகிறது.

வாஸ்து சாஸ்திரத்தின்படி, தினமும் அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன் எழுந்து, குளித்துவிட்டு சூரிய பகவானுக்கு நீர் அர்ப்பணிப்பது மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படுகிறது. நீர் அர்ப்பணிக்கும்போது சூரிய மந்திரங்களை உச்சரிப்பதும், பின்னர் சிவப்பு நிற மலரைச் சமர்ப்பிப்பதும் வாழ்க்கையில் நேர்மறை ஆற்றலை அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது.

இந்தச் செயல்முறை மன உறுதியை அதிகரிப்பது மட்டுமல்லாமல், தடைபட்ட பணிகளில் உள்ள தடைகளை நீக்கி வெற்றிக்கான பாதையை வகுத்துத் தருகிறது என்றும் வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது. மேலும், இது வீட்டில் அமைதி, நிம்மதி மற்றும் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்தும் என்றும் நம்பப்படுகிறது.

**அனுமனுக்குத் தேங்காய் சமர்ப்பித்தல்**

எவ்வளவு கடினமாக உழைத்தாலும், மற்றவர்களின் பொறாமை அல்லது எதிர்மறைப் பார்வைகளால் வேலையில் தடைகளைச் சந்திக்க நேரிடலாம் என்று பலர் நம்புகின்றனர். இதற்கு வாஸ்து சாஸ்திரம் ஒரு எளிய பரிகாரத்தை பரிந்துரைக்கிறது. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அனுமன் கோவிலுக்குச் சென்று பக்தியுடன் தேங்காய் சமர்ப்பிப்பது எதிர்மறை விளைவுகளைக் குறைக்கும் என்று நம்பப்படுகிறது.

இந்த வழிபாடு வீட்டில் உள்ள எதிர்மறை ஆற்றல்களை நீக்கி, தீய சக்திகள் அல்லது கண் திருஷ்டியிலிருந்து பாதுகாப்பை அளிப்பதாகக் கூறப்படுகிறது. மேலும், இது முக்கியமான பணிகளைச் சுமூகமாக நிறைவு செய்ய உதவுவதாகவும் நம்பப்படுகிறது.

**நினைவில் கொள்ள வேண்டியவை**

வாஸ்து பரிகாரங்கள் ஆன்மீக நம்பிக்கைகளின் அடிப்படையில் பரிந்துரைக்கப்படுகின்றன. இவற்றுடன் நேர்மறை சிந்தனை, ஒழுக்கம் மற்றும் கடின உழைப்பு ஆகியவை வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகரிக்கின்றன. வீட்டில் நேர்மறையான சூழலைப் பேணுவதும் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமாகும்.

# விவாகரத்து வழக்குகள் அதிகரிக்க செல்போன்கள்தான் முக்கிய காரணம்!



சென்னை, ஜூன். 16–

சென்னை ஐ.ஐ.டி.யில் நடந்த விழா ஒன்றில் ஐகோர்ட்டு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பங்கேற்றார். அப்போது அவர் பேசியதாவது:– நீதித்துறையில் ஏ.ஐ.யின் தாக்கம் தொடங்கியுள்ளது. சில நீதிபதிகள் வெளியிட்ட தீர்ப்புகளில் ஏ.ஐ. வழங்கிய மேற்கோள்கள் இடம் பெற்று இருக்கின்றன. அந்த மேற்கோள்கள் எந்த கோர்ட்டும் பிறப்பிக்காத உத்தரவுகளை தெரிவிக்கின்றன. இது அந்த தீர்ப்பை வழங்கிய நீதிபதிகளுக்கு சங்கடத்தை ஏற்படுத்தி இருக்கிறது. என்னை போன்றவர்களுக்கு இந்த பிரச்சினை இல்லை. ஏனென்றால் நான் ஏ.ஐ. உதவியை நாடுவதே இல்லை.

சென்னை ஐகோர்ட்டில் எனக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. அதற்காக கணினியில் ஏ.ஐ. உள்பட நவீன தொழில்நுட்பத்தை கற்றுக்கொள்ள வேண்டிய நிலையும் இருக்கிறது. தற்போதைய காலத்தில் மனதை ஒருநிலைப்படுத்துதல் என்பது இயலாத காரியமாக இருக்கிறது. ஒரு விஷயத்தில் நமது முழு கவனத்தையும் செலுத்தினால்தான் வெற்றி பெற இயலும். பல ஆண்டுகளாக வக்கீலாக பணியாற்றி இருக்கிறேன். சில ஆண்டுகளாக நீதிபதியாகவும் பணியாற்றி வருகிறேன். ஏராளமான வழக்குகளை கையாண்டு இருக்கிறேன். ஆனால் கணவன்–மனைவிக்கு இடையேயான விவாகரத்து வழக்குகள் அதிகரிக்க செல்போன்கள்தான் முக்கிய காரணம். செல்போ ன்களால் மனிதர்களுக்கு இடையிலான உறவுகளில் விரிச ல்கள் ஏற்படுகின்றன. தொழில்நுட்ப சாதனங்களில் இருந்து மனிதர்களை பாதுகாப்பது இப்போதைக்கு அவசியமாகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## நீங்கள் தொடர்ந்து ஐஸ் வாட்டர் குடிக்கிறீங்களா..?




கோடைக்காலத்தில் வெயிலின் தாக்கத்தால் உடல் சோர்வடைகிறது. வெளியே சென்று வீட்டிற்கு வரும்போதோ அல்லது அலுவலகத்தில் சோர்வாக உணரும்போதோ, பலரும் முதலில் செய்வது குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து ஒரு பாட்டில் குளிர்ந்த நீரை எடுத்துப் பருகுவதுதான். அதில் ஐஸ் கட்டிகளைப் போட்டு, அந்த ஜில்லென்ற நீரை அருந்தும்போது கிடைக்கும் சுகமும் திருப்தியும் தனித்துவமானவை. சிலர் சாதாரண நீரைக் குடிப்பதை முற்றிலும் நிறுத்திவிட்டு, வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ எப்போதும் குளிர்ந்த நீரையே குடித்து வருகின்றனர்.

நாம் குடிக்கும் குளிர்ந்த நீர் தொண்டையின் வழியாக உடலுக்குள் நுழையும்போதே செரிமான மண்டலத்தின் மீது முதல் பாதிப்பு ஏற்படுகிறது என்று இரைப்பை குடல் நிபுணர்கள் விளக்குகிறார்கள். பொதுவாக, நாம் உண்ணும் உணவைச் செரிக்க உடல் ஒரு குறிப்பிட்ட உள் வெப்பத்தைப் (உடல் வெப்பநிலை) பயன்படுத்துகிறது. ஆனால் குளிர்ந்த நீரை அருந்தும்போது, அந்தத் தட்பவெப்பநிலையைத் தாங்கிக்கொள்ள இரத்த நாளங்கள் திடீரென சுருங்குகின்றன.

இது செரிமான செயல்முறையை வெகுவாக மந்தமாக்குகிறது. இதனால் உண்ட உணவு சரியாகச் செரிக்கப்படாமல், வயிறு உப்புசம், கடுமையான மலச்சிக்கல் மற்றும் வாயுத் தொல்லை போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இப்பழக்கம் தொடர்ந்தால் குடலின் செயல்பாடு பாதிக்கப்படும் என்றும் மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

குளிர்ந்த நீரை அருந்துவது இதயத் துடிப்பிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அதிர்ச்சியூட்டும் உண்மையையும் இதய நோய் நிபுணர்கள் கூறுகின்றனர். நம் உடலில் தலையிலிருந்து வயிறு வரை செல்லும் மிக முக்கியமான நரம்புகளில் ஒன்று 'வேகஸ் நரம்பு' (Vagus Nerve) ஆகும். இது உடலின் தானியங்கி செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துகிறது. நாம் திடீரென குளிர்ந்த நீரை அருந்தும்போது, அந்தத் தட்பவெப்பத்தால் இந்த வேகஸ் நரம்பு தீவிரமாகத் தூண்டப்படுகிறது.

இதனால் இதயத் துடிப்பு திடீரெனக் குறைகிறது. ஏற்கனவே பலவீனமான இதயம் அல்லது இரத்த அழுத்தப் (BP) பிரச்சனைகள் உள்ளவர்களுக்கு இது சில சமயங்களில் உயிருக்கே ஆபத்தானதாக அமையலாம் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்..

மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், குளிர்ந்த நீர் உடலில் உள்ள கொழுப்பைக் கரைப்பதில்லை.. மாறாக, அதை உறைய வைத்து கெட்டியாக்குகிறது. நாம் உண்ணும் உணவில் உள்ள கொழுப்புச் சத்துக்கள் குளிர்ந்த நீருடன் தொடர்பு கொள்ளும்போது உறைந்துவிடுகின்றன. இதனால் உடல் அந்தக் கொழுப்பை எரிப்பது மிகவும் கடினமாகிறது.

இதன் விளைவாக, உடல் எடை வேகமாக அதிகரித்தல் மற்றும் வயிற்றுப் பகுதியில் கொழுப்பு சேருதல் போன்ற பிரச்சனைகள் ஏற்படலாம் என்று உடல் எடை குறைப்பு நிபுணர்கள் விளக்குகின்றனர். இவை தவிர, சைனஸ் (sinus) பிரச்சனை உள்ளவர்கள் குளிர்ந்த நீரை அருந்திய உடனேயே தொண்டை தொற்று, டான்சில் வீக்கம், கடுமையான சளி மற்றும் ஒற்றைத் தலைவலி அதிகரிப்பு போன்ற பாதிப்புகளுக்கு ஆளாகும் அபாயமும் உள்ளது.

இருப்பினும், இதற்காகக் கோடைக்காலத்தில் குளிர்ந்த நீரை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்று அர்த்தமல்ல. தாகத்தைத் தணிக்கவும் உடலைக் குளிர்விக்கவும் நம் முன்னோர்கள் கையாண்ட ஒரு சிறந்த முறை மண்பானையைப் பயன்படுத்துவதாகும். மண்பானையில் உள்ள நீர் இயற்கையாகவே குளிர்ச்சியடைகிறது. இத்தகைய நீரை அருந்துவது உடலுக்குத் தேவையான தாதுக்களை வழங்குவதோடு, நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கிறது. தற்காலிகக் குளிர்ச்சியை நாடிச் செல்வது நீண்ட கால உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுத்துவிடக் கூடாது.

# மேலமடைக்கு தனி வி.ஏ.ஓ. அலுவலகம் அமைக்க கோரி ஆட்சியரிடம் மனு!



ராமநாதபுரம், ஜூன். 16–

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை ஒன்றியத்திற்குட்பட்ட மேலமடை கிராமத்திற்கு தனி கிராம நிர்வாக அலுவலகம் (வி.ஏ.ஓ.) அமைக்க வேண்டும் என பொதுமக்கள் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

2,000–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் மேலமடை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள், அரசுச் சேவைகளைப் பெற சுமார் 3 கிலோமீட்டர் தூரம் பயணித்து கிராம நிர்வாக அலுவலரை சந்திக்க வேண்டிய நிலை இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் முதியோர், பெண்கள் மற்றும் மாணவர்கள் சிரமமடைந்து வருவதால், மேலமடை கிராமத்திற்கு தனி வி.ஏ.ஓ. அலுவலகம் அமைத்து தனி குரூப்பாக அறிவிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலமடை கிராமத் தலைவர் ஜெய சருவந்தம் தலைமையில் மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து மனு வழங்கப்பட்டது.

# திருமலையில் ஜேஷ்டாபிஷேகம் ஜூன் 26-ல் தொடக்கம்!




திருமலை, ஜூன். 16–

திருமலையில் ஜூன் 26–ம் தேதி முதல் 28ம் தேதி வரை வருடாந்திர ஜேஷ்டாபிஷேகம் நடைபெற உள்ளது.

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதத்தில் ஜேஷ்டாபிஷேக உற்சவம் நடைபெறுவது ஐதீகம். இந்த உற்சவம் வரும் 26–ம் தேதி தொடங்கி, 28ம் தேதி வரை 3 நாட்கள் நடைபெற உள்ளது. விசாக நட்சத்திரத்தில் தொடங்கும் இந்த உற்சவம் கேட்டை நட்சத்திரத்தில் நிறைவு பெறும். திருமலையில் உள்ள சம்பங்கி மண்டபத்தில் உற்சவ மூர்த்திகளான ஸ்ரீதேவி, பூதேவி சமேத மலையப்பருக்கு 3 நாட்களும் சிறப்பு திருமஞ்சன நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

இதில் மலையப்பர் அணிந்திருக்கும் தங்க கவசம் அகற்றப்பட்டு, திருமஞ்சனத்திற்கு பிறகு வைர கவசம் அணிவிக்கப்பட்டு திருவீதி உலா நடைபெறும். 2ம் நாள் வைர கவசம் அகற்றப்பட்டு, முத்து கவசம் அணிவிக்கப்பட்டு திருவீதி உலா நடைபெறும். 3வது நாள், முத்து கவசம் அகற்றப்பட்டு, மீண்டும் தங்க கவசம் அணிவிக்கப்படும். இந்த கவசம் அடுத்த ஆண்டு நடைபெறும் ஜேஷ்டாபிஷேகம் வரை அகற்றப்படாமல் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜேஷ்டாபிஷேகத்தை முன்னிட்டு ஜூன் 28ம் தேதி திருமலையில் நடைபெறும் திருக்கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவ சேவை போன்றவை ரத்து செய்யப்பட்டுள்ளதாக திருமலை திருப்பதி தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

# பழனி பஞ்சாமிர்தம் விலை உயருமா? தங்கத்தேர் கட்டணமும் அதிகரிப்பு! பக்தர்களிடம் கருத்து கேட்கும் கோவில் நிர்வாகம்!!



பழனி, ஜூன். 16–

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் விற்பனை செய்யப்படும் பஞ்சாமிர்தத்தின் விலையையும், தங்கத்தேர் இழுக்கும் கட்டணத்தையும் உயர்த்த கோவில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதுகுறித்து பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களது கருத்துகள், ஆட்சேபனைகளை குறிப்பிட்ட தேதிக்குள் தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தற்போது ரூ.45க்கு விற்கப்படும் அரை கிலோ டின் பஞ்சாமிர்தத்தின் விலையை ரூ.60 ஆகவும், ரூ.40க்கு விற்கப்படும் மற்றொரு வகை பஞ்சாமிர்தத்தை ரூ.50 ஆகவும், ரூ.20க்கு விற்கப்படும் 200 கிராம் பஞ்சாமிர்த டப்பாவை ரூ.30 ஆகவும் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அறிவிப்பு கோவில் தலைமை அலுவலகத்தில் ஒட்டப்பட்டுள்ளது. விலை உயர்வு குறித்து பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களது கருத்துகள் அல்லது ஆட்சேபனைகளை ஜூலை 7–ம் தேதிக்குள் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம் என கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதேபோல், பழனி மலைக்கோவிலில் தினமும் இரவு நடைபெறும் தங்கத்தேர் புறப்பாட்டில் கலந்து கொண்டு தேர் இழுக்கும் பக்தர்களிடம் தற்போது ரூ.2,000 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த கட்டணம் கடந்த 2011 முதல் மாற்றமின்றி இருந்து வருகிறது.

விலைவாசி உயர்வை கருத்தில் கொண்டு, தங்கத்தேர் புறப்பாட்டுக்கான கட்டணத்தை ரூ.2,500 ஆக உயர்த்தவும் கோவில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. இந்த கட்டண உயர்வு குறித்து பக்தர்கள் தங்களது கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை ஜூலை 7–ம் தேதிக்குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்தர்களின் கருத்துகளை பெற்ற பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும் என கோவில் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செல்ல அண்ணாமலை திட்டம்!



மதுரை, ஜூன். 16–

பா.ஜ.,வில் இருந்து விலகிய அண்ணாமலை செப்.14 ல் புதிய கட்சியின் பெயர், கொள்கைகளை அறிவிக்க உள்ளதுடன், அதன்பின் மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்ய உள்ளார். இதுபற்றி அவரது ஆதரவாளரும், பா.ஜ., ஊடகப் பிரிவின் முன்னாள் செயலாளருமான விஷ்ணுபிர சாத் கூறியதாவது: இளைஞ ர்களுக்கு அரசியல் பயிற்சி வழங்கும் வகையில் மாவ ட்டம் தோறும் விரைவில் பயிற்சி முகாம்கள் நடக்க உள்ளன. அதற்குள் மாவட்ட பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட வாய்ப்புள்ளது.

பின்னர் செப்.,14 ல் அண்ணாமலை புதிய கட்சியின் பெயர், கொள்கைகள், செயல்பாடுகளை அறிவிப்பதுடன், மாநில, மாவட்ட நிர்வாகிகளையும் அறிவிக்க உள்ளார். இதில் பெரும்பாலானோர் 50 வயதுக்கு உட்பட்டோராக இருப்பர். புதிய அறிவிப்புகளைத் தொடர்ந்து நவம்பர், டிசம்பரில் மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார். அதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோம்" என்றார்.

# குழந்தைகளுக்கு புற்றுநோய்.! பள்ளிகளில் லிப்ஸ்டிக் பயன்படுத்த தடை..! கேரளாவில் அதிரடி.!!



திருவனந்தபுரம், ஜூன். 16–

குழந்தைகளின் உடல்நலனை பாதுகாக்கும் நோக்கில், கேரள குழந்தைகள் நலக் குழு "லிப்ஸ்டிக் இல்லா வளாகம்" என்ற விழிப்புணர்வு இயக்கத்தை தொடங்கியுள்ளது. குறைந்த தர அழகுசாதனங்களில் பாதரசம், கேட்மியம் போன்ற நச்சுப் பொருட்கள் இருப்பதால் புற்றுநோய் உள்ளிட்ட உடல்நல பாதிப்புகள் ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இது மாநிலம் முழுவதும் அரசு தடை அல்ல; விழிப்புணர்வு முயற்சியாகவே நடத்தப்படுகிறது

குழந்தைகளின் உடல்நலனை பாதுகாக்கும் நோக்கில், கேரள குழந்தைகள் நலக் குழு "லிப்ஸ்டிக் இல்லா வளாகம்" என்ற விழிப்புணர்வு இயக்கத்தை தொடங்கியுள்ளது. குறைந்த தர அழகுசாதனங்களில் பாதரசம், கேட்மியம் போன்ற நச்சுப் பொருட்கள் இருப்பதால் புற்றுநோய் உள்ளிட்ட உடல்நல பாதிப்புகள் ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இது மாநிலம் முழுவதும் அரசு தடை அல்ல; விழிப்புணர்வு முயற்சியாகவே நடத்தப்படுகிறது.

# தேர்தல் தோல்விக்கு காரணம் என்ன? ஸ்டாலினிடம் அறிக்கை ஒப்படைப்பு!



சென்னை, ஜூன். 16–

தி.மு.க., தோல்வி அடைந்ததற்கான காரணங்களை ஆராய, 19 குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்த குழுக்களில், 36 பேர் இடம் பெற்றனர். தமிழகம் முழுதும் பயணம் செய்து, தொகுதி வாரியாக, அக்குழுவினர் அறிக்கை தயாரித்தனர்.

மொத்தம் உள்ள 234 தொகுதிகளிலும் நடந்த கள ஆய்வு தொடர்பான அறிக்கை, மாவட்டம் வாரியாக ஸ்டாலினிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அந்த அறிக்கையில், 'கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கிய தொகுதிகளில், தொகுதிக்கு சம்பந்தமே இல்லாதவர்களை, கூட்டணி கட்சியினர் நிறுத்தி உள்ளனர். கூட்டணி கட்சிகளுக்கு தொகுதி களை ஒதுக்கு ம்போது, அவர்களின் செல்வாக்கு மற்றும் வெற்றி வாய்ப்பை, அடிமட்ட அளவில் ஆராய்ந்து முடிவு எடுக்காமல் கோட்டை விட்டுள்ளோம்.

'தேர்தல் வியூக நிறுவனத்தின் ஆலோசனைப்படி, கட்சி நிர்வாகிகளை வேலை வாங்கியதும், தேர்தலில் தி.மு.க., அடைந்த தோல்வி க்கு காரணம்' என்பது உள்ளிட்ட பல்வேறு கருத்து கள் இடம் பெற்றுள்ளன.

இது தொடர்பாக, கள ஆய்வுக்குழுவில் இடம் பெற்ற, தி.மு.க., முன்னாள் எம்.எல்.ஏ., எழிலரசன் கூறுகையில், "மக்களை, பல வகைகளில் சந்தித்து, ஒரு நாளைக்கு 10 மணி நேரம் என, 140 மணி நேரம் ஆய்வு நடத்தினோம்.

"நேரடியாக பெற்ற கருத்துகள், கடிதங்கள் வாயிலாக பெற்றவை என மொத்தம் 6,620 பக்கங்க ளுக்கு கருத்துகள் வந்துள்ளன. அவற்றை படித்து குறிப்பெடுத்து, 476 பக்க அறிக்கையாக தயாரித்து உள்ளோம். அதை, தி.மு.க., தலைவர் ஸ்டாலினிடம் வழங்கி இருக்கிறோம்," என்றார்.

# சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 2 நாட்கள் புத்தாக்க பயிற்சி!



சென்னை, ஜூன். 16

எம்.எல்.ஏ.க்களுக்கு 2 நாட்கள் புத்தாக்க பயிற்சி வழங்கப்பட உள்ளது. ஜூன். 16– 17 ஆகிய 2 நாட்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புத்தாக்க பயிற்சியை முதலமைச்சர் விஜய் தொடங்கி வைக்கிறார். புத்தாக்க பயிற்சியில் புதிதாக தேர்வான எம்.எல்.ஏ.க்கள் மட்டுமின்றி அனைவரும் பங்கேற்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை கலைவாணர் அரங்கில் எம்.எல்.ஏ.க்களுக்கு புத்தாக்கப் பயிற்சி நடைபெற உள்ளது.

# சாலைப் பணியை விரைந்து முடிக்கக்கோரி ஆட்சியர் கிராம மக்கள் மனு!



ராமநாதபுரம், ஜூன். 16–

ராமநாதபுரம் மாவட்டம் பேராவூர் ஊராட்சியில் ஆறு மாதங்களாக முடங்கிக் கிடக்கும் சாலைப் பணியை விரைந்து முடிக்கக் கோரி, 200–க்கும் மேற்பட்ட கிராம மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்தனர்.

இந்திரா நகர்காட்டூரணி வழியாக இளமனூர், மாடக்கொட்டான் உள்ளிட்ட கிராமங்களை இணைக்கும் சாலைப் பணிகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு விபத்துகள் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டினர். எனவே மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை மனு வழங்கினர்.

# வேலை வாய்ப்பு

## AIIMS–ல் புதிய 2668 காலிப்பணியிடங்கள் அறிவிப்பு!




நிறுவனத்தின் பெயர்: AIIMS அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் (All India Institutes of Medical Sciences)
அறிவிப்பு எண்: 93/2026 (தேதி: 13/06/2026)
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
பணி முறை: நிரந்தரப் பணி
தேர்வின் பெயர்: பொது ஆட்சேர்ப்புத் தேர்வு 5 (CRE–5)
மொத்தக் காலிப்பணியிடங்கள்: 2668 (குரூப் B மற்றும் C பதவிகள்)
பணிபுரியும் இடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 13.06.2026
விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 03.07.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (Online)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://AIIMSexams.ac.in/



தேனி மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில் முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் தலைமையில் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் எடுத்துக்கொண்டார்கள்.

# அடிப்படை வசதிகள் கோரி மக்கள் ஆட்சியரிடம் மனு!



ராமநாதபுரம், ஜூன். 16–

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகாவிற்கு உட்பட்ட தேவிபட்டினம் அருகே உள்ள சக்கரவாள நல்லூர் கிராம மக்கள், சாலை, குடிநீர், பேருந்து, தெருவிளக்கு மற்றும் வடிகால் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரக்கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

கிராமத்தில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாததால் மாணவர்கள், முதியவர்கள் மற்றும் பெண்கள் பெரும் சிரமங்களை சந்தித்து வருவதாகவும், மழைக்காலங்களில் சாலை மற்றும் வடிகால் வசதியின்மை காரணமாக மக்கள் பாதிக்கப்படுவதாகவும் மனுவில் தெரிவித்துள்ளனர்.

பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்தும் தீர்வு கிடைக்காத நிலையில், புதிதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட ஆட்சியர் உடனடி நடவடிக்கை எடுத்து கிராமத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என கிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881




## இன்றைய கார்ட்டூன்




# இந்தியாவில் டீசல் விலை உயர்கிறதா? - டீசல் மீதான வரியை மாற்றியமைத்த அரசு!!

புதுடெல்லி, ஜூன். 16–

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்து வரும் நிலையில் மத்திய அரசு டீசல் மற்றும் விமான எரிபொருள் ஏற்றுமதி மீதான 'விண்ட்ஃபால்' (Windfall) வரியை திடீரென உயர்த்தி உள்ளது. அதே வேளையில் பெட்ரோல் ஏற்றுமதி மீதான வரியில் எந்த




மாற்றமும் செய்யப்படவில்லை. மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பின் படி டீசல் ஏற்றுமதி மீதான சிறப்பு கூடுதல் கலால் வரி லிட்டருக்கு ரூ. 13.5–லிருந்து ரூ. 14–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. விமான எரிபொருள் ஏற்றுமதி மீதான வரி லிட்டருக்கு ரூ. 9.5–லிருந்து ரூ. 12.5–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பெட்ரோல் ஏற்றுமதி மீதான வரி லிட்டருக்கு ரூ. 1.5 என்ற அளவில் மாற்றமின்றி தொடர்கிறது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை நிலவரத்திற்கு ஏற்ப மத்திய அரசு அவ்வப்போது இந்த வரியை மாற்றி வருகிறது. பிப்ரவரி 28ஆம் தேதி ஈரானில் போர் தொடங்கியது. இதனை அடுத்து கச்சா எண்ணெய் விலை உயர தொடங்கியது. இதனால் கச்சா எண்ணெய் விநியோகத்தில் ஒரு தேக்கநிலை ஏற்பட்டது. இதைப் பயன்படுத்தி, இந்தியாவின் முன்னணி எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் தங்களுக்குக் கிடைக்கும் கச்சா எண்ணெயை சுத்திகரித்து, வெளிநாடுகளுக்கு அதிக விலைக்கு ஏற்றுமதி செய்து கொள்ளை லாபம் பார்க்க முயல்கின்றன. இதனை தடுக்கவே மார்ச் மாதம் முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை அரசு இந்த வரியை மாற்றி அமைத்து வருகிறது.

நல்ல லாபம் கிடைப்பதால் தனியார் நிறுவனங்கள் லாப நோக்கில் மொத்த எரிபொருளையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிட்டால் இந்தியாவிற்குள் பெட்ரோல், டீசல் மற்றும் விமான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. ஏற்றுமதி வரியை உயர்த்தும்போது, நிறுவனங்கள் வெளிநாடுகளுக்கு விற்பதை விட உள்நாட்டில் விற்பதே லாபகரமாகத் தோன்றும். இதன் மூலம் இந்தியாவின் எரிசக்தித் தேவைக்கு சிக்கல் ஏற்படாது.

அரசின் இந்த ஏற்றுமதி வரி உயர்வால் சாதாரண மக்களுக்கு தொடர்ந்து பெட்ரோல், டீசல் தடையின்றி கிடைப்பது உறுதி செய்யப்படும். உள்நாட்டுச் சந்தையில் விற்கப்படும் பெட்ரோல், டீசலுக்கான வரிகளில் எந்த மாற்றமும் இல்லை. எனவே பெட்ரோல், டீசல் விலையிலும் மாற்றமில்லாமல் விற்கப்படுகிறது. இந்த இக்கட்டான சூழலில் உள்நாட்டில் பெட்ரோல் , டீசல் மற்றும் விமான எரிபொருள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே மத்திய அரசு இவற்றுக்கான ஏற்றுமதி வரியை மாற்றி வருகிறது. இதனால் உள்நாட்டில் பெட்ரோல், டீசல் விலைகளில் எந்த ஒரு மாற்றமும் இருக்காது. சென்னையை பொருத்தவரை இன்றைய தினம் ஒரு லிட்டர் பெட்ரோல் 107. 87 ரூபாய்க்கும் ஒரு லிட்டர் டீசல் 99.6 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ சிஎன்ஜி 2 ரூபாய் விலை உயர்ந்து 97 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

# நடிகர் ரஜினிகாந்துடன் நயினார் நாகேந்திரன் சந்திப்பு!

சென்னை, ஜூன். 16–

ரஜினிகாந்த் உடனான சந்திப்பு குறித்து நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:– சென்னை போயஸ் தோட்டத்தில், தாதாசாகேப் பால்கே விருது பெற்ற இந்திய திரையுலகின் சூப்பர் ஸ்டார், பத்மபூஷன் ரஜினிகாந்தை, பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயலாளரும், தமிழக பாஜகவின் மேலிட பொறுப்பாளருமான அரவிந்த் மேனனுடன் இணைந்து மரியாதை நிமித்தமாக சந்தித்தோம்.



அப்போது, பாரத பிரதமர் நரேந்திர மோடியின் கடந்த 12 ஆண்டுகால மக்கள் நல ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட முக்கிய வளர்ச்சி திட்டங்கள் மற்றும் நாட்டின் முன்னேற்றப் பயணத்தை எடுத்துரைக்கும் வகையில் வெளியிடப்பட்ட சிறப்பு நூல்களை அவருக்கு வழங்கி மகிழ்ந்தோம். இந்நிகழ்வில், பாரதிய ஜனதா கட்சியின் மாநிலச் செயலாளர் கராத்தே தியாகராஜன் மற்றும் மாநில பிரசாரப் பிரிவு அமைப்பாளர் பாண்டியராஜ் உடன் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தின் நிதிநிலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியீடு!

சென்னை, ஜூன். 16–



தமிழகத்தின் நிதிநிலை குறித்து (ஜூன் 16) வெள்ளை அறிக்கையை நிதி அமைச்சர் மரியவில்சன் வெளியிடுகிறார்.

தமிழகத்தின் அனைத்து துறைகளின் நிதிநிலை, கடன் சுமை மற்றும் முந்தைய நிர்வாக செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என பதவியேற்பு விழாவில் முதல்வர் விஜய் அறிவித்தார். அந்தவகையில் சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழகத்தின் நிதிநிலை குறித்து வெள்ளை அறிக்கையை நிதி அமைச்சர் மரியவில்சன் வெளியிடுகிறார்.

# சிரப்களை வாங்க மருத்துவரின் பரிந்துரை கட்டாயம்!

டெல்லி, ஜூன். 16–

சிரப்களை வாங்க மருத்துவரின் பரிந்துரை கட்டாயம் என மத்திய சுகாதாரம், குடும்ப நல அமைச்சகம் அறிவித்துள்ளது.

இருமல் மருந்துகள் உள்ளிட்ட அனைத்து சிரப்–களுக்கும் மத்திய அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது.




# 2026 ஜூன் 18-இல் கூடும் தமிழக சட்டப்பேரவை; ஆளுநர் உரையுடன் தொடக்கம்!

சென்னை, ஜூன். 16–



தமிழக முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசின் முதல் முழுமையான சட்டப்பேரவை கூட்டத்தொடர் 2026 ஜூன் 18–ஆம் தேதி ஆளுநர் உரையுடன் தொடங்குகிறது. முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் முதல் கூட்டத்தொடர் இதுவாகும். 2026–27–ம் நிதியாண்டுக்கான புதிய அரசின் முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கூட்டத்தொடர் மாநில அரசின் எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள், நிதி மேலாண்மை மற்றும் மக்கள் நலத் திட்டங்கள் குறித்து முக்கிய அறிவிப்புகளை கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளுநரின் உரையில் அரசின் சாதனைகள், புதிய திட்டங்கள், தொழில் முதலீடுகள், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் சமூக நலப் பணிகள் குறித்து விரிவாக இடம்பெறவுள்ளது. குறிப்பாக, மாநிலத்தின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் எதிர்கால வளர்ச்சி இலக்குகள் தொடர்பாக முக்கிய அம்சங்கள் எடுத்துரைக்கப்படலாம்.

மேலும், தமிழக நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை ஜூன் 16 அன்று வெளியிடப்பட்ட நிலையில்,இந்த கூட்டத்தொடரில் வருவாய், செலவு, கடன் நிலவரம் மற்றும் நிதி சீர்திருத்தங்கள் குறித்த முக்கிய தகவல்கள் இதில் இடம்பெறலாம் என கூறப்படுகிறது.

இந்த கூட்டத்தொடரில் பல்வேறு துறைகள் தொடர்பான புதிய மசோதாக்கள், மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் குறித்த விவாதங்களும் நடைபெற உள்ளன. இதனால் ஜூன் 18–ஆம் தேதி தொடங்கும் சட்டப்பேரவை கூட்டம் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

# மூடப்பட்ட 717 டாஸ்மாக் கடைகளின் பட்டியல்: அமைச்சர் விக்னேஷ் வெளியிட்டார்!

சென்னை, ஜூன். 16–

தமிழக அரசு மூடிய 717 டாஸ்மாக் கடைகளின் பட்டியலை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் விக்னேஷ் வெளியிட்டார்.

தமிழகத்தில் 4,765 டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனை கடைகள் இயங்கி வந்த நிலையில், தமிழக முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பின், வழிபாட்டு தலங்கள், கல்வி நிறுவனங்கள், போக்குவரத்து முனையங்கள் அருகில் இருக்கும் 717 டாஸ்மாக் கடைகளை மூட உத்தரவிட்டார்.

இதையடுத்து, அத்தகைய கடைகளை மூடும் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதற்கிடையே, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், 'அரசால் மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கடைகள் குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்ட போது, அதை வெளியிட அரசு மறுப்பதாக குற்றம்சாட்டினார். இந்நிலையில், அரசு அறிவிப்பின்படி 717 கடைகள் மூடப்பட்டதாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் விக்னேஷ் தெரிவித்துள்ளார். மேலும், மூடப்பட்ட கடைகளின் பட்டியலையும் வெளியிட்டுள்ளார்.

அதில் கடைகளின் எண், எந்த மாவட்டத்தில் மற்றும் மண்டலத்தில், மொத்தம் எத்தனை கடைகள் மூடப்பட்டுள்ளன என்ற தகவல்கள் இடம்பெற்றுள்ளன. அதன்படி, மதுரை மண்டலத்தில் அதிகபட்சமாக 290 கடைகள் மூடப்பட்டுள்ளன.

இந்த மண்டலத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் 63 கடைகளும், விருதுநகர் மாவட்டத்தில் 42 கடைகளும், மதுரை தெற்கில் 39, திருநெல்வேலி 33, ராமநாதபுரத்தில் 29, திண்டுக்கல்லில் 25, சிவகங்கையில் 18, மதுரை வடக்கு 13, கன்னியாகுமரியில் 15, தேனியில் 12 கடைகள் மூடப்பட்டுள்ளன.

கோவை மண்டலத்தில் 179 கடைகள் மூடப்பட்டுள்ளன. இந்த மண்டலத்தில் கோவை வடக்கில் 48, ஈரோட்டில் 42, திருப்பூரில் 31, நீலகிரியில் 27, கோவை தெற்கில் 23, கரூரில் 8 கடைகள் மூடப்பட்டுள்ளன.

சென்னை மற்றும் சேலம் மண்டலங்களில் தலா 82 கடைகள் மூடப்பட்டுள்ளன. சென்னை மண்டலத்தில் திருவள்ளூர் கிழக்கில் 27 கடைகள், வடசென்னை 13, காஞ்சிபுரம் வடக்கு 10, தென் மற்றும் மத்திய சென்னையில்தலா 9, காஞ்சிபுரம் தெற்கு 8, திருவள்ளூர் மேற்கு 6 கடைகள் மூடப்பட்டுள்ளன.

சேலம் மண்டலத்தில் சேலம் மாவட்டத்தில் 22, திருவண்ணாமலை 19, நாமக்கல் 14, வேலூரில் 6, அரக்கோணம், கிருஷ்ணகிரி, தருமபுரியில் தலா 7 கடைகள் மூடப்பட்டுள்ளன. திருச்சி மண்டலத்தில் 84 கடைகள் மூடப்பட்டுள்ளன.

இந்த மண்டலத்தில் கடலூரில் 21, புதுக்கோட்டையில் 17, திருச்சியில் 15, விழுப்புரத்தில் 9, நாகையில் 4, திருவாரூர், தஞ்சை, பெரம்பலூரில் தலா 6 கடைகள் மூடப்பட்டுள்ளன.

# வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்திற்கான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினராக விண்ணப்பிக்கலாம்; கலெக்டர் தகவல்!

தூத்துக்குடி, ஜூன். 16–

தூத்துக்குடி மாவட்டத்தில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்திற்கான மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழுவானது (வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்) 10.11.2020 அன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி குழுவானது மூன்று வருடத்திற்குள் கலைக்கப்பட வேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழுவானது கலைக்கப்படுகிறது. புதிய குழுவிற்கான கீழ்கண்டவாறு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

1. மாவட்ட ஆட்சியர் தலைவர்
2. மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் உறுப்பினர்
3. நாடாளுமன்ற மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் உறுப்பினர்
4. காவல் கண்காணிப்பாளர் உறுப்பினர்
5. பட்டியல் சாதியினர் / பழங்குடியினரைச் சேர்ந்த மூன்று குரூப் ஏ அதிகாரிகள் / பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினரைச் சேர்ந்த மாநில அரசின் Gazatted அதிகாரிகள் உறுப்பினர்
6. பட்டியல் சாதியினர் / பழங்குடியினரைச் சேர்ந்த அதிகாரப்பூர்வமற்ற உறுப்பினர்கள் அரசு சாரா நிறுவனங்கள் சேர்ந்த பட்டியல் சாதியினர் / பழங்குடியினர் உள்ளடக்கிய 5 நபர்களுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள்

பட்டியல் சாதியினர் / பழங்குடியினரைச் சேர்ந்த அரசு சாரா உறுப்பினர்கள் 3 நபர்கள்

எனவே, தகுதி வாய்ந்த நபர்கள் தூத்துக்குடி மாவட்ட விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு (வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்) உறுப்பினராக வருகின்ற 16.06.2026க்குள் விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தெரிவித்துள்ளார்.

## தூய்மைப் பணியாளர்கள் மறுவாழ்வு குறித்த மாவட்ட அளவிலான

# விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழுவானது கலைக்கப்பட்டு, புதிய குழுவிற்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்: கலெக்டர் தகவல்!

தூத்துக்குடி, ஜூன். 16–

தூத்துக்குடி மாவட்டத்தில் தூய்மைப் பணியாளர்கள் மறுவாழ்வு குறித்த மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழுவானது 14.06.2017 அன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி குழுவானது மூன்று வரு டத்திற்குள் கலைக்கப்பட வேண்டும். எனவே நடைமுறையில் உள்ள தூய்மை பணியாளர்கள் மறுவாழ்வு குறித்த மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழுவானது தற்போது கலைக்கப்படுகிறது. புதிய குழு விற்கான உறுப்பினர்கள் கீழ்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

1. மாவட்ட ஆட்சியர் தலைவர்
2. மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் செயல் உறுப்பினர்
3. மாநில சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் (பட்டியலினத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும் அல்லது மாநில அரசால் பரிந்துரை செய்யப்படும் தூத்துக்குடி மாவட்டத்தினைச் சேர்ந்த இரண்டுக்கும் மிகாத நபர்கள்) உறுப்பினர்
4. காவல் கண்காணிப்பாளர் உறுப்பினர்
5. உதவி இயக்குநர், பேரூராட்சிகள் உறுப்பினர்
6, அனைத்து மாநகராட்சி ஆணையர் / மாநகராட்சி ஆணையர்கள்/மண்டல அளவிலான உறுப்பினர்
7. மாவட்டத்தில் இரயில்வே துறையினைச் சேர்ந்த ஒரு பொறுப்பாளர் கெஜட் அதிகாரிகள் உறுப்பினர்
8. அதிகாரப்பூர்வமற்ற உறுப்பினர்கள்

மனித கழிவுகளை அகற்றும் தொழில் செய்வதை தடுத்தல் மற்றும் மறுவாழ்விற்காக பணி மேற்கொள்ள முன்வரும் எண்ணிக்கையில் 4 பேருக்கு மேற்படாத சமூக ஆர்வலர்கள் (மாவட்ட ஆட்சியரால் முடிவு செய்யப்பட்டவர்கள்) உறுப்பினர்

9. மாவட்ட அளவிலான வங்கி குழுவின் ஒரு பொறுப்பாளர் உறுப்பினர்

எனவே, தகுதி வாய்ந்த நபர்கள் தூத்துக்குடி மாவட்ட தூய்மைப் பணியாளர்கள் மறுவாழ்வு குறித்த மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினராக வருகின்ற 16.06.2026 க்குள் விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், தெரிவித்துள்ளார்.

## சினிமா துளிகள்..!

## ஜூன் 16, 2026 சினிமா உலக ஹாட் அப்டேட்ஸ்!




**கோலிவுட் (தமிழ்)**

நடிகர் Bharathirajaa மறைவுக்குப் பிறகு தமிழ் திரையுலகினர் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். கிராமிய வாழ்க்கையை திரையில் கொண்டு வந்த அவரது பங்களிப்பு மீண்டும் பேசுபொருளாகியுள்ளது.

Jana Nayagan திரைப்படத்தின் வெளியீட்டை எதிர்நோக்கி ரசிகர்களின் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. ஜூன் 19 வெளியீடு குறித்து தொடர்ந்து தகவல்கள் வெளியாகின்றன.

**பாலிவுட் (இந்தி)**

Kareena Kapoor Khan, Aamir Khan தயாரிப்பு நிறுவனத்தின் 25வது ஆண்டு விழாவில் தனது அழகிய தோற்றத்தால் கவனம் பெற்றார்.

Welcome to the Jungle ஜூன் 26 வெளியீட்டுக்காக ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

இசையமைப்பாளர் Pritam Chakraborty தனது பிறந்தநாளில் வெளியிட்ட பதிவால், வணிக இசையிலிருந்து ஓய்வு பெறப்போகிறாரா என்ற கேள்வி ரசிகர்களிடையே எழுந்துள்ளது.

Cocktail 2 திரைப்படம் CBFC–யின் 'A' சான்றிதழைப் பெற்றுள்ளது. படத்தில் Shahid Kapoor, Kriti Sanon மற்றும் Rashmika Mandanna நடித்துள்ளனர். Cocktail 2 ஜூன் 19 வெளியீட்டை முன்னிட்டு ரசிகர்களிடம் பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது

**ஹாலிவுட் (English Cinema)**

Zendaya மற்றும் Tom Holland இணைந்து புதிய Spi–der–Man: Brand New Day படத்தின் விளம்பர நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இது ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

Taylor Swift, Toy Story 5 முதல் காட்சியில் சிறப்பு இசை நிகழ்ச்சியால் ரசிகர்களை ஆச்சரியப்படுத்தினார்.

**பாலிவுட்**

Cocktail 2 ஜூன் 19 வெளியீட்டை முன்னிட்டு ரசிகர்களிடம் பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.

Kareena Kapoor Khan, Aamir Khan தயாரிப்பு நிறுவனத்தின் 25வது ஆண்டு விழாவில் தனது அழகிய தோற்றத்தால் கவனம் பெற்றார்.

Welcome to the Jungle ஜூன் 26 வெளியீட்டுக்காக ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

# உயர் ரத்த அழுத்த மாத்திரை உட்பட 4 மருந்து விற்பனைக்கு தடை!




புதுச்சேரி, ஜூன். 16–

புதுவை மருந்து கட்டுப்பாட்டுதுறை அதிகாரி ஆனந்த கிருஷ்ணன் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:–

மேற்கு திரிபுரா, ஆந்திரா மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகத்திடம் பெறப்பட்ட கடிதம் அடிப்படையில் மும்பை நிறுவனம் தயாரிக்கும் மோக்ஸ்கிளேவ் 625, சிக்கிம் நிறுவனம் தயாரிக்கும் கிளேவம் 625, பெங்களூரு நிறுவனம் தயாரிக்கும் 625 டியோ என்ற ஆண்டிபயாடிக் மாத்திரைகள், அரியானா, யமுனாநகர், மனக்பூரில் உள்ள நிறுவனம் தயாரிக்கும் டெல்மினஸ் என்ற உயர்ரத்த அழுத்த மாத்திரை ஆகியவை தரம் இல்லாதவை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாத்திரைகளை புதுவையில் விற்க தடை விதிக்கப்படுகிறது. மருந்தகங்கள் இந்த மாத்திரைகளை உடனடியாக உற்பத்தியாளர், விநியோகஸ்தர்களுக்கு திருப்பி அனுப்ப வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.






Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020